

## 2026லும் நாம் ஆட்சி அமைக்கப்போவது உறுதி! அடுத்த 6 மாதங்கள்

# களத்தில் இறங்கி மக்களைச் சந்தித்து பிரச்சாரத்தை மேற்கொள்வோம்!

## கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை, செப்.7–

**அடுத்த 6 மாதங்கள் களத்தில் இறங்கி மக்களைச் சந்தித்து பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் 2026லும் நாம் ஆட்சி அமைக்கப் போவது உறுதி என்றும் இளைஞரணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.**

அவரது உரை வருமாறு :–

இன்றைக்கு சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம் தொகுதிகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள் வட்ட இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் மற்றும் பாக அமைப்பாளர்களுக்கான அறிமுக கூட்டத்தில் பங்கேற்று உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். வந்திருக்கக் கூடிய கிட்டத்தட்ட ஆயிரத்துக்கும் அதிகமான வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி அமைப்பாளர் உங்கள் அத்தனைபேருக்கும் முதலில் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

### புதுமையான நிகழ்ச்சி!

வித்தியாசமான நிகழ்ச்சி. இன்னும் சொல்லப்போனால் வரலாற்றில் இடம் பெறக்கூடிய நிகழ்ச்சி. அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கே இது ஒரு புதுமையான நிகழ்ச்சி. ஏனென்றால், சென்னை கிழக்கு மாவட்டத்திற்கான நிகழ்ச்சி. நான் அதிகமாக நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகின்ற மாவட்டம், சென்னை கிழக்கு மாவட்டம். பலமுறை பல நிகழ்ச்சிகளில் சொல்லி இருக்கிறேன். தமிழ்நாடு முழுக்க பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று பல்வேறு தொகுதிகளுக்குச் சென்று, பல்வேறு நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, கழக நிகழ்ச்சி யாக இருந்தாலும் சரி கலந்து கொள்ளும்பொழுது, என்னை செல்லமாக அழைப்பார்கள். சேப்பாக்கத்துச் செல்லப்பிள்ளை, சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் என்ன கேட்டாலும் உடனே நடந்து விடுகிறது. நாங்கள் எல்லாம் சேப்பாக்க திருவல்லிக்கேணி தொகுதிக்கு வந்து விடுகிறோம். அப்படிக்கூட நகைச்சுவையாக சில பேர் குறிப்பிடுவார்கள்.

ஆனால், நான் பலமுறை அண்ணன் சேகர்பாபு அவர்களைப் பார்க்கும்போது எல்லாம் சொல்லி இருக்கிறேன். நான் சென்னை மேற்கு மாவட்டத்திலிருந்து கிழக்கு மாவட்டத்துக்கு வந்து விடுகிறேன். அதிலும் உங்களின் துறைமுகம் தொகுதிக்கே வந்து விடுகிறேன். அந்த அளவுக்கு எல்லோரையும் மிஞ்சுகிற அளவுக்கு, எல்லாருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய அண்ணன் சேகர்பாபு அவர்கள், எப்படியும் மாதத்திற்கு ஒரு மூன்று முறை, பத்து நாட்களுக்கு ஒரு முறையாவது அவருடைய சென்னை கிழக்கில் ஏதாவது ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, அந்த ஆறு தொகுதிகளில் ஒரு தொகுதியில், ஏதாவது ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து, என்னை அவரின் மாவட்டத்துக்கு அழைத்து சென்றுதான் நிகழ்ச்சியை நடத்துவார். ஆனால் இன்றைக்கு முதன் முதலாக சென்னை கிழக்கு மாவட்டத்தின் நிகழ்ச்சி, சென்னை மேற்கு மாவட்டத்தில், அண்ணா அறிவாலயத்தில், கலைஞர் அரங்கத்தில் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.

### கழகத்தின் உயிர் நாடி!

அண்ணன் என்னதான் இங்கு இருந்தாலும் அவரின் நினைவு முழுக்க சென்னை கிழக்கு மாவட்டத்தில்தான் இருக்கும். இன்னொரு சிறப்பும் இந்த மாவட்டத்திற்கு உண்டு. நம்முடைய கழக மாவட்டங்களிலேயே மிக அதிகமான சட்டமன்றத் தொகுதியை கொண்ட மாவட்டம் என்றால், அது சென்னை கிழக்கு மாவட்டம்தான். ஆறு தொகுதிகள் கொண்ட மாவட்டம் சென்னை கிழக்கு மாவட்டம். கழகத்திற்கு மிக மிக முக்கியமான மாவட்டம். இன்னும் சொல்லப்போனால் கழகத்தின் உயிர் நாடி போன்ற மாவட்டம் இந்த கிழக்கு மாவட்டம்.

ஏனென்றால், தமிழ்நாட்டின் முதலமைச்சரை கொடுத்திருப்பது உங்களின் சென்னை கிழக்கு மாவட்டம்தான், கொளத்தூர் தொகுதிதான். கொளத்தூர் தொகுதிக்கான அறிமுக கூட்டம் நாளை இதே அரங்கத்தில் நடைபெற இருக்கிறது.

கடந்த 15, 20 நாட்களாக சென்னையில் இருக்கக்கூடிய பல்வேறு மாவட்டங்களுக்கு, பல்வேறு தொகுதிகளுக்கு அறிவிப்புகளை வந்து அந்த அறிமுக கூட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், எத்தனையோ நிகழ்ச்சி நடந்தாலும் இந்த சென்னை கிழக்கு மாவட்ட கழக உடன்பிறப்புகளை, இளைஞர் அணி நிர்வாகிகளைச் சந்திக்கும்போது எனக்கு கூடுதல் மகிழ்ச்சியும், கூடுதல் உணர்வும் ஏற்படும்.

பொதுவாக, கிழக்கு என்றாலே அது விடியல்தான். அதேமாதிரி சென்னை கிழக்கு என்றுச் சொன்னால் எப்பொழுதுமே கழகத்திற்கு விடியலாக, வெளிச்சமாக இருக்கக்கூடியது நம்முடைய கிழக்கு மாவட்டம். அந்த அளவுக்கு உங்களின் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் சேகர்பாபு அவர்கள் இந்த மாவட்டத்தை கழகத்தின் கோட்டையாக இன்றைக்கு வலிமையாக மாற்றி காட்டி இருக்கிறார்.

### அறிமுகக் கூட்டம்!

இன்னொரு சிறப்பு. இன்றைக்கு காலையில் தான் உங்களின் பெயர்கள் முரசொலி நாளிதழில் அறிவிப்பு வந்தது. காலையில் செய்திதாளில் அறிவிப்பு வந்தது, மாலையில் அறிமுக கூட்டம் நடக்கிறது. இது இளைஞர் அணிக்கு மட்டுமே சாத்தியம். முரசொலியில் காலையில் அறிவிப்பு வந்து, மாலையில் ஒரு இராணுவ கட்டுப்பாட்டோடு இந்த நிகழ்ச்சியை நடத்தி காட்டுகிறோம். அதற்கு மிக முக்கிய காரணம் அண்ணன் சேகர்பாபு அவர்கள்தான்.

நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, துணை முதலமைச்சராக பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும், இளைஞர் அணி நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்போது எனது மனசுக்கு ஒரு மிகுந்த நெகிழ்ச்சியை ஏற்படுத்தும். என்னுடைய சொந்த குடும்பத்தில் இருக்கக்கூடிய, எனது அண்ணனையும், தம்பியையும் பார்க்கின்ற அந்த உணர்வு எப்பொழுதுமே இளைஞர் அணி நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும்போது ஏற்படும்.

அதேபோல், பலமுறை சொல்லி இருக்கிறேன். பல பொறுப்புகள் வந்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர், விளையாட்டுத் துறை அமைச்சர், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர், துணை முதலமைச்சர் இப்படி எத்தனையோ பொறுப்புகள் இருந்தாலும், என்னுடைய மனதிற்கு மிகுந்த நெருக்கமான ஒரு பொறுப்பு என்றால் அது கழகத்தின் இளைஞர் அணி செயலாளர் என்ற அந்த பொறுப்புதான். அந்த உணர்வோடு உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன்.

### 45 ஆண்டுகள் ஆலமரம்!

1980ஆம் ஆண்டு மதுரை ஜான்சிராணி பூங்காவில் கலைஞர் அவர்களாலும், நம்முடைய இனமான பேராசிரியர் அவர்களின் வாழ்த்துகளோடும், நம்முடைய தலைவர் அவர்கள் இளைஞர் அணியை தொடங்கினார்கள். கிட்டத்தட்ட 45 வருடத்துக்கு பிறகு இன்றைக்கு தமிழ்நாடு முழுக்க, அது படிப்படியாக வளர்ந்து இன்றைக்கு ஒரு மிகப்பெரிய ஆலமரமாக நம் கழகத்திற்கு இளைஞர் அணி துணை நிற்கிறது.

கழகத்தில் எத்தனையோ அணிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 25 அணிகள் இருக்கிறது. ஆனால், கலைஞர் அவர்களால் கழகத்தின் முதன்மையான அணி என்று பலமுறை பாராட்டப்பட்டது நம்முடைய இளைஞர் அணி என்பதை நீங்கள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு இயக்கங்கள், இளைஞர் அணியைத் துவங்குகிறார்கள். ஆனால் நம்முடைய தி.மு.க இளைஞர் அணிக்கு இன்னொரு பெருமை இருக்கிறது. என்ன தெரியுமா? இளைஞர் அணி வரலாறு நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு இயக்கத்திற்கு இளைஞர் அணியைத் துவங்கியது திராவிட முன்னேற்றக் கழகம், அதை தொடங்கியது நம்முடைய தலைவர் அவர்கள். அந்தப் பெருமை எந்த இயக்கத்துக்கும் கிடையாது. நாம்தான் இந்தியாவிலேயே முதல் இயக்கம். அப்படிப்பட்ட இளைஞர் அணியில் நாமெல்லாம் ஒரு முக்கியமான பொறுப்புக்கு இன்றைக்கு வந்திருக்கிறோம் என்றால், அது நமக்கு கிடைத்திருக்கின்ற மிகப்பெரிய பெருமை.

இங்கே இளைஞர் அணி நிர்வாகிகள் மட்டுமல்ல, மாவட்ட, பகுதி, வட்டக்கழக நிர்வாகிகளும் வந்திருக்கிறீர்கள். அவங்களுக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் இளைஞர் அணி இன்றைக்கு இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு மாவட்ட, பகுதி, வட்டக்கழக நிர்வாகிகள் உங்களின் ஒத்துழைப்பும், உங்களின் அரவணைப்பும் மிகமிக முக்கியம்.

### மிகப்பெரிய சாதனை!

இன்றைக்கு இந்தியாவில் பல கட்சிகள் பூத் கமிட்டி போடுவதற்கே திண்டாடிட்டுக்கொண்டு இருக்கிற நேரத்தில் பூத்துக்கு ஒரு இளைஞர் அணி அமைப்பாளரை நாம் நியமித்துக்கொண்டு இருக்கிறோம். அதுதான் இளைஞர் அணியின் சிறப்பு, நாம் செய்திருக்கின்ற மிகப்பெரிய சாதனை. புதிதாக வந்திருக்கக்கூடிய நீங்கள் அத்தனைபேரும் உங்களின் காலரை தூக்கிவிட்டு பெருமையாக சொல்லிக் கொள்ளலாம். தி.மு.க. இளைஞர் அணியில் நான் ஒரு பொறுப்புக்கு வந்திருக்கிறேன் என்று. ஏனென்றால், சாதாரணமாக நீங்கள் இந்த இடத்துக்கு வரவில்லை.

### பதவி கிடையாது, பொறுப்பு!

உங்களுக்கு தலைவர் அவர்கள் கொடுத்திருப்பது பதவி கிடையாது. உங்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பது பொறுப்பு. அதை பொறுப்போடு உணர்ந்து நீங்கள் செயல்படுவீர்கள் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த நேரத்தில் உங்களுக்கு நான் ஒரேயொரு வாக்குறுதி கொடுக்கிறேன். உறுதிமொழி கொடுக்கிறேன். இளைஞர் அணியில் நீங்கள் சரியாக உழைத்தீர்கள் என்றால் நிச்சயம் உங்களுக்கான அங்கீகாரத்தை நம்முடைய தலைவர் அவர்கள் சரியான நேரத்தில் வழங்குவார். அதற்கு சிறந்த உதாரணம் உங்க முன்பு இருக்கக்கூடிய இந்த மேடை. இந்த மேடையில் பல உதாரணங்கள் இருக்கிறது.

கழகத்தின் துணை அமைப்புச் செயலாளராக அண்ணன் தாயகம் கவி அவர்கள் உட்கார்ந்து இருக்கிறார். தலைவர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபொழுது இவர் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளராக இருந்து தலைவரின் குழுவில் வேலை பார்த்தவர் அண்ணன் தாயகம் கவி அவர்கள். அதுமட்டுமல்ல என்னைவிட பல வருடங்கள் அவர் சீனியர். நான் இளைஞர் அணிச் செயலாளராக வரும்போது, அவர் எனக்கு துணைச் செயலாளராக இருந்து



என்னை வழிநடத்தியவர்தான் அண்ணன் தாயகம் கவி அவர்கள். இளைஞர் அணியில் அவர் சிறப்பாக உழைத்ததால்தான் இன்றைக்கு தாய் கழகத்தில் துணை அமைப்புச் செயலாளராக தலைவர் அவர்கள் அவருக்கு அந்த பொறுப்பைக் கொடுத்து அழகு பார்த்திருக்கிறார்.

அதேபோல் இந்த மண்டலத்தின் பொறுப்பாளர் மாநில துணைச் செயலாளர் சகோதரர் ஜோயல் அவர்கள் தலைவர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது மாநில துணைச் செயலாளராக பணியாற்றிச் தலைவர் அவர்களுக்கு பக்கபலமாக இருந்தவர்தான் ஜோயல் அவர்கள். இன்றைக்கு எனக்கும் பக்கபலமாக சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அண்ணா சென்னையில் நடத்துவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுங்கள் என்று அதை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யக்கூடியவர்தான் சகோதரர் ஜோயல் அவர்கள்.

### சிறப்பான செயல்பாடு!

அதேபோல இங்கே இருக்கக்கூடிய மாவட்டத் துணை அமைப்பாளர்கள் சகோதரர் பிரபு மற்றும் வினோத் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் இருவருமே பகுதி அமைப்பாளர்களாக சிறப்பாக செயல்பட்டு இன்றைக்கு பொறுப்பு உயர்வுக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவர்களை இன்றைக்கு மாவட்ட துணை அமைப்பாளர்களாக உயர்த்தியிருக்கிறார் நம்முடைய தலைவர் அவர்கள். இங்கே இருக்கக்கூடிய எழும்பூர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் அண்ணன் வேலு அவர்கள் இளைஞர் அணியில் பகுதி அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டு, இன்றைக்கு வடக்கு பகுதிச் செயலாளராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

இப்படி இந்த அரங்கத்தில் மட்டுமல்ல, இந்த மாவட்டத்தில் மட்டுமல்ல தமிழ்நாடு முழுக்க இளைஞர் அணியில் பணியாற்றியவர்கள் இன்றைக்கு கழகத்தில் மாவட்ட செயலாளராக, ஒன்றிய கழகச் செயலாளராக, பேரூர் கழகச் செயலாளராக, நகர செயலாளராக, பகுதி கழகச் செயலாளராக உயர்த்தப்பட்டுள்ளார்கள். அதுமட்டுமல்ல இன்றைக்கு பலர் சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளாக, மேயர்களாக இன்றைக்கு மக்கள் பணியாற்றி இருக்கிறவர்கள் நம்முடைய இளைஞர் அணியிலிருந்து பயிற்சி எடுத்துக்கொண்டு, இளைஞர் அணி என்பது ஒரு பயிற்சிக்களம். மிகப்பெரிய பொறுப்புகளுக்கான ஒரு பயிற்சிக் களம்தான் இளைஞர் அணி என்பதை நீங்கள் உறுதியாக உங்கள் மனதில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்னும் பெருமையாகச் சொல்லவேண்டுமென்றால், நம்முடைய கழகத்திற்கு தலைவரையும், தமிழ்நாட்டுக்கு முதலமைச்சரையும் கொடுத்திருக்கக்கூடியது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. அப்படிப்பட்ட ஒரு மிக மிக முக்கியமான அணிக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். நீங்கள் உழைக்க தயாராக இருந்தால், தலைவர் அவர்கள் உங்களை உயர்த்த தயாராக இருப்பார்.

இன்றைக்கு முரசொலியில் அறிவிப்பு வந்து விட்டது. செய்திதாளில் பெயர் வந்துவிட்டது. பொறுப்பு வாங்கிவிட்டோம். நான்கு பிளக்ஸ், பேனர் வைத்தோம். சமூக வலைதளத்தில் பதிவு போட்டோம், புகைப்படம் எடுத்துக்கொண்டோம். வாட்ஸ் ஆப் பதிவு போட்டோம் என்று நிற்பது உங்களின் பொறுப்பு கிடையாது.

உங்களுக்கெல்லாம் மினிட் புக் கொடுக்கப்படும். கொடுத்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த மினிட் புக்கை தயவு செய்து ஒழுங்காக பராமரியுங்கள். எந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும், அது அமைப்பாளர் நடத்துகிற நிகழ்ச்சியாக இருக்கட்டும், மாவட்டக் கழகச் செயலாளர் நடத்துகிற நிகழ்ச்சியாகட்டும், நீங்கள் கலந்து கொள்கிற நிகழ்ச்சியாக இருந்தாலும் அதைபற்றி ஒரு குறிப்பு எழுதி அதில் யார் வந்திருக்கிறார்களோ, அதில் யார் கையெழுத்து போட தயாராக இருக்கிறார்களோ அவர்களிடம் கையெழுத்து வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.

### சரியாக பராமரியுங்கள்!

நாளைக்கு உங்கள் மேல் ஏதாவது புகார் வந்தது என்றால், நிகழ்ச்சிக்கு இந்த தம்பி வரவில்லை, எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளவில்லை என்று யாராவது குற்றச்சாட்டு சொன்னார்கள் என்றால், இல்லை நான் கலந்து கொண்டேன் என்று காட்டுவதற்கு ஒரே ஆதாரம் உங்க கையில் இருக்கின்ற மினிட் புக்தான். எனக்கு தெரியும் நீங்கள் அத்தனை பேரும் கையில் செல்போன் வைத்திருக்கிறீர்கள். இப்போது யாரும் மினிட் புக்கை பராமரிப்பது இல்லை. செல்போனில் மட்டும் புகைப்படம் எடுத்துக் கொள்கிறீர்கள். அதை ஒரு பிரிண்ட் அவுட் எடுத்து, அதில் ஒட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதை சரியாக பராமரியுங்கள்.

இன்றைக்கு நீங்கள் இளைஞர் அணியில் பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள். ஒரு சிறிய தவறுக்குக்கூட நீங்கள் இடம் கொடுக்கக்கூடாது. இங்கு இருக்கக்கூடிய நீங்கள் ஒவ்வொருத்தரும் 50 லிருந்து 100 வாக்காளர்களை உங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தீர்கள் என்றால், யாராலும் உங்களின் வளர்ச்சியை தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது.

எந்தப் பணியை செய்தாலும் கழகப் பணியாக இருந்தாலும் சரி, இளைஞர் அணி பணியாக இருந்தாலும் சரி, மாவட்ட கழகப் பணியாக இருந்தாலும் சரி, எந்த பணியை செய்தாலும் அதை மாவட்ட, பகுதி அமைப்பாளகளுடம் ஆலோசித்துவிட்டு அவர்களின் அனுமதியைப் பெற்று அந்த பணிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

### பாசறைப் பக்கம்!

அதேமாதிரி களத்தில் எவ்வளவு செயல்படுகிறீர்களோ, அதே மாதிரி சமூக வலைதளங்களிலும் நீங்கள் செயல்பட வேண்டும். உங்களுக்கு அன்பகத்திலிருந்து வருகிற பதிவுகளை படியுங்கள். தலைவருடைய பக்கம், இளைஞர் அணி பாசறைப் பக்கம், உங்களின் மாவட்ட செயலாளரின் பக்கத்தையெல்லாம் பின்தொடருங்கள். இப்படி தொடர்ந்து சமூக வலைதளத்திலும் நீங்கள் ஆக்டிவா இருக்க வேண்டும்.

இன்னொரு வேண்டுகோள் தினமும் காலையில் தயவு செய்து நம்முடைய முரசொலி பத்திரிகையை படித்துவிடுங்கள். அதிலும் குறிப்பாக, முரசொலியில் கடைசி பக்கத்தை, தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு என்று தனியாக ஒதுக்கி கொடுத்து இருக்கிறார்கள். எந்த அணிக்கும் அந்த சிறப்பு கிடையாது. கடந்த இரண்டு வருடங்களாக அதை நடத்தி வருகிறோம். அது படிப்பதற்கு மிகவும் சுலபமாக இருக்கும். சின்ன சின்ன துணுக்குகள், நம்முடைய அரசின் சாதனைகள், கார்ட்டூன்ஸ் இப்படி மிகவும் சுலபமாக இருக்கும். தயவுசெய்து அதை படியுங்கள்.

தினமும் முரசொலி படித்தீர்கள் என்றால்தான் அன்றைக்கு என்ன அரசியல் நடந்துக்கொண்டிருக்கிறது. அதில் நம்முடைய தலைவரின் அறிக்கை என்ன, நாம் எப்படி எதிர்த்தரப்பினரிடம் வாதம் செய்ய வேண்டும் என்பதை நீங்கள் உணரலாம்.

இங்கு வந்திருக்கக்கூடிய பகுதி செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய அன்பு வேண்டுகோள். புதிய பொறுப்புகளுக்கு வந்திருக்கக்கூடிய, நம்முடைய இளைஞர் அணி தம்பிகள் அவர்களுக்கு பெரிதாக அரசியல் அனுபவம் இருக்காது. இன்னும் சொல்லப்போனால் சிலப்பேர் முதல் தலைமுறையாக மக்கள் பணிக்கு, கழகப் பணிக்கு வந்திருப்பார்கள். அவர்கள் ஏதாவது தெரிந்தோ, தெரியாமலோ சின்னச்சின்ன தவறுகள் செய்துவிட்டார்கள் என்றால், நெறிமுறை தெரியாமல் நடந்துகொண்டால் அவர்களை தயவுசெய்து புறக்கணிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடன் கூட இருந்து அவர்களின் கைகளைப் பிடித்து வழி நடத்துங்கள்.

### நிச்சயம் நடத்திக் காட்டுவோம்!

கைகளை அதிகமாக தட்டியதால், நானே உரிமைக் கொடுத்ததாக நினைத்துவிடக் கூடாது. மிக மிக கவனமாக இருக்க வேண்டும். ஆதாரத்தோடு ஏதாவது குற்றச்சாட்டு வந்தது என்றால், தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கும் தயங்க மாட்டார் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு சென்னை கிழக்கு மாவட்டம் மட்டுமல்ல, அடுத்து தமிழ்நாடு முழுவதும் நகர – பேரூர் வார்டுகள், ஊராட்சிக் கிளைகள் தோறும் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை நியமிக்க இருக்கிறோம். அப்படி நியமித்தால், இளைஞர் அணியில் மட்டும் கிட்டதட்ட 5 லட்சம் நிர்வாகிகள் இருக்க போகிறார்கள். இது இந்தியாவிலேயே எந்த இயக்கத்திற்கும் கிடைக்காத ஒரு சாதனை. அதை நிச்சயம் நடத்தி காட்டுவோம்.

இன்றைக்கு இந்தியாவிலேயே ஒரு அசைக்க முடியாத இயக்கமாக, அசைக்க முடியாத யாரும் தொட்டு பார்க்க முடியாத தலைவராக நம்முடைய தலைவர் அவர்கள் இருப்பார்கள். அந்த 5 லட்சம் பேரும் ஆளுக்கு ஒரு பத்து வாக்குகளை, பத்து மக்களின் நம்பிக்கையை பெற்றுவிட்டார்கள் என்றால், கழகத்திற்கு சிறப்பாக அழைத்து வந்தார்கள் என்றால் நிச்சயம் 2026–லும் நாம்தான் ஆட்சி அமைக்க போவது உறுதி, அதற்கு இளைஞர் அணியின் பங்கு மிக மிக முக்கியமாக இருக்க வேண்டும்.

இன்றைக்கு பல இளைஞர்கள் சில குழப்பங்களில் இருக்கிறார்கள். புதிதாக வந்திருக்கக்கூடிய புது வாக்காளர்கள் எந்த இயக்கத்தில் சென்று சேர்வது. சில பேர் என்ன கொள்கை என்றே தெரியாமல் சுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களிடமெல்லாம் நீங்கள் பேச வேண்டும். அவர்களை அழைத்துப் பேச வேண்டும். மக்களோடு நெருங்கிய தொடர்பில் இருங்கள். சில இளைஞர்கள் எதிர்க்கட்சியில் இருப்பார்கள், மாற்று கட்சியில் இருப்பார்கள். அவர்களிடமெல்லாம் நம் இயக்கத்தின் வரலாற்றை, தியா கங்களை, நம் தலைவர் செய்திருக்கின்ற சாதனைகளை, அரசின் திட்டங்களை எல்லாம் நீங்கள் எடுத்து சொல்ல வேண்டும்.

அனைத்து இளைஞர்களோடும் மனது விட்டு பேசுங்கள். அவங்களின் பிரச்சினை என்ன, அதை நம்மால் தீர்க்க முடியுமா என்று பாருங்கள். இன்றைக்கு இளைஞர் அணி சார்பாக களத்தில் மட்டுமல்லாமல், கருத்தியல் ரீதியாகவும் பல பணிகளை நம்முடைய இளைஞர் அணி செய்து கொண்டு இருக்கிறது.

### முக்கியமான வேலை!

கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு இளைஞர் அணிக்கு தலைவர் அவர்கள் முக்கியமான வேலை கொடுத்தார்கள். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் இளைஞர் அணி சார்பாக கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறக்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இன்றைக்கு 234 தொகுதியில் கிட்டத்தட்ட 100 நூலகங்களை இளைஞர் அணி சார்பாக நாம் திறந்து இருக்கிறோம்.

தலைவர் இன்னொரு உத்தரவு போட்டார்கள். கலைஞர் நூற்றாண்டில் சிறந்த இளம் பேச்சாளர்களை தேர்வு செய்து கொடுங்கள் என்று சொன்னார். பேச்சுப்போட்டி நடத்தி 100 இளம் பேச்சாளர்களை கண்டுபிடித்து, தலைமைக்கு ஒப்படைக்க வேண்டும் என்றுச் சொன்னார்கள். ஆனால் இளைஞர் அணி நாம் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் என அனைத்து நிர்வாகிகளும் சேர்ந்து சிறப்பாக நடத்தி கிட்டத்தட்ட 200 இளம் பேச்சாளர்களை நாம் தலைமைக்கு ஒப்படைத்திருக்கிறோம். அந்த 200 இளம் பேச்சாளர்களும் இன்றைக்கு சிறப்பாக தமிழ்நாடு முழுக்க பயணித்து கழகத்தின் பொதுக் கூட்டங்களில் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

அதேமாதிரி எந்த அணியும், எந்த இயக்கமும் செய்யாதது. முத்தமிழறிஞர் பதிப்பகம் என்று ஒரு பப்ளிகேஷன் ஆரம்பித்து, கிட்டத்தட்ட 25 புத்தகங்களை நாம் அச்சடித்து இருக்கிறோம். மிக மிக முக்கியமான முன்னெடுப்பாக கலைஞர் மாணவர் பத்திரிகையாளர் திட்டத்தை ஆரம்பித்து இருக்கிறோம். அடுத்து, வருங்கால பத்திரிகையாளர்களை உருவாக்குவதற்கான ஒரு திட்டம் அது.

அதேபோல கழகம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதை தொடர்ந்து, அதை கொண்டாடுகின்ற வகையில், ஒரு மிகப்பெரிய கருத்தரங்கத்தை சென்னையில் விரைவில் நடத்த இருக்கிறோம். இந்தப் பணிகளை எல்லாம் மக்களிடம், இளைஞர்களிடம் நீங்கள் பகிர்ந்து கொள்ளுங்கள்.

சமீபத்தில்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி பத்திரிகையாளர்கள், நம்முடைய தலைவரை பார்த்து கேட்டார்கள். புதிய கட்சிகள் கூட்டணிக்கு வருமா என்று கேட்டார்கள். நம்முடைய தலைவர் அவர்கள் உடனே சொன்னார்கள். கழகத்தை நோக்கி புதிய கட்சிகள் வருகிறதோ? இல்லையோ? புதிய இளைஞர்கள், புதிய வாக்காளர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று தைரியமாக சொன்னவர்தான் நம் தலைவர் அவர்கள். தலைவர் அவர்கள் சொன்னதை மெய்ப்பிக்கின்ற வகையில் இன்றைக்கு புதிய இளைஞர்களை நீங்கள் கழகத்திற்கு அழைத்து வர வேண்டும்.

அப்படி புதிய இளைஞர்களை நீங்கள் அழைத்து வருவது தேர்தலுக்கு பிறகும் நமக்கு மிகப்பெரிய ஒரு பலமாக, சக்தியாக அது மாறும். நம்மிடம் கொள்கை இருக்கிறது. வரலாறு இருக்கிறது. திராவிட மாடல் அரசின் சாதனைகள் இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசின் திட்டங்களை ஒட்டுமொத்த இந்தியாவும் பாராட்டிக்கொண்டு இருக்கிறது.

சமீபத்தில் 10 நாட்களுக்கு முன்பு, முதலமைச்சர் காலை உணவு திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் விரிவுபடுத்தினார். அதற்கு பஞ்சாபிலிருந்து முதலமைச்சர் வந்தார். பஞ்சாப் முதலமைச்சர் வந்து திட்டத்தை துவங்கி வைத்துவிட்டு வாழ்த்தி பேசினார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே இது மிகுந்த சிறப்பான திட்டம் விரைவில் என்னுடைய மாநிலத்தில் நான் இந்த திட்டத்தை அமல்படுத்த போகிறேன் என்று சொன்னார். இதுதான் திராவிட மாடல் அரசின் சாதனை.

மற்ற மாநிலங்களும், வெளிநாட்டவர்களும் இந்த திட்டத்தை எப்படி செயல்படுத்துகிறீர்கள் என்று பார்த்துவிட்டு செல்கிறார்கள். அப்படி அருமையான திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் பொறுக்க முடியாத ஒன்றிய பா.ஜ.க அரசுதான் நமக்கு பல்வேறு நெருக்கடிகளை கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் எதிர்த்து குரல் கொடுக்கக்கூடிய இந்தியாவிலேயே ஒரு சிறந்த முதலமைச்சர் என்றால் நம்முடைய தலைவர் அவர்கள் என்பதை நீங்கள் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

சமீபத்தில் தலைவர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்ற ஒரு முன்னெடுப்பை அறிவித்தார். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 30 சதவிகித வாக்காளர்களை நம்முடைய கழகத்தில் உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்றுச் சொன்னார். கிட்டத்தட்ட 2 கோடி உறுப்பினர்களை நாம் சேர்த்திருக்கிறோம். ஒவ்வொரு மாவட்ட செயலாளரும் என்னை பார்க்கும்போது சொல்வது, இந்த ஓரணியில் தமிழ்நாடு வெற்றிக்கு மிக மிக முக்கியமான காரணம் மக்களை சந்தித்து ஒவ்வொரு நாளும் வாக்காளர்களின் வீட்டுக்கே சென்று சேர்த்ததில் மிகமிக முக்கிய பங்கு இளைஞர் அணி தம்பிமார்கள் சிறப்பாக களத்தில் செயலாற்றினார்கள்.

அப்படி ஒவ்வொரு மாவட்ட செயலாளரும் பாராட்டினார்கள். இப்படி நாம் நாளுக்கு நாள் வலிமையாகிக்கொண்டே போகிறோம். நம்முடைய கூட்டணி வலிமையை பார்த்து இன்றைக்கு பா.ஜ.க–வுக்கும், அ.தி.மு.க–வுக்கும் பயம் வந்து விட்டது. நேற்று முன்தினம் பேசிய எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள், நம்மைப் பார்த்து, நம்முடைய கூட்டணியை பார்த்து ஒரு விமர்சனம் வைத்தார். தி.மு.க கூட்டணியில் இருக்கக்கூடிய கட்சிகள் பார்த்து பத்திரமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் தி.மு.க அவர்களை விழுங்கிடும் என்று எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் சொன்னார்.

அதை சொல்வது யார் என்பதை நீங்கள் யோசித்து பார்க்க வேண்டும். முழுதாக பா.ஜ.க–வால் விழுங்கப்பட்டிருக்கக்கூடிய அ.தி.மு.க–விலிருந்து விழுங்கப்பட்ட எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இந்த விமர்சனத்தை வைக்கிறார். நம்முடைய கழக தொண்டர்கள் யாராவது இரண்டு பேர் எங்கயாவது சந்தித்துக்கொண்டார்கள் என்றால் விசாரித்துக் கொள்வார்கள். என்ன பேசுவார்கள்.

நன்றாக இருக்கிறீர்களா, கட்சி பணிகள் எல்லாம் எப்படி போகுது, கட்சி கூட்டத்தில் எல்லாம் கலந்துகொண்டீர்களா? தலைவரின் அறிக்கையைப் பார்த்தீங்களா இப்படித்தான் நம்முடைய திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்த கட்சி தொண்டர்கள் பேசிப்பார்கள். ஆனால் அ.தி.மு.க–வை சேர்ந்த இரண்டு கட்சி தொண்டர்கள் பார்த்துக் கொண்டார் என்ன பேசுவார்கள் தெரியுமா? அவர்கள் இருவருக்கும் என்ன பேச வேண்டும் என்பதே தெரியாது. திருதிருவென்று முழிப்பார்கள். முதலில் அவர்கள் கேட்டுக்கொள்கிற கேள்வியே நீங்கள் எந்த அணி, அந்த அணியா? இந்த அணியா? நீங்கள் ஓ.பி.எஸ் அணியா? ஈ.பி.எஸ் அணியா? டி.டி.வி அணியா? சசிகலா அணியா? செல்லூர் ராஜு அணியா? இன்றைக்கு புதுசா வந்திருக்கக்கூடிய செங்கோட்டையன் அணியா? என்று கேட்கின்ற நிலைமையில்தான் இன்றைக்கு அ.தி.மு.க–வினர் இருக்கிறார்கள்.

அ.தி.மு.க–வும், பா.ஜ.க–வும் இன்றைக்கு ஒரே அணியில் இருக்கிறது. அந்த அளவுக்கு அ.தி.மு.க–வை, பா.ஜ.க. இன்றைக்கு துண்டு துண்டாக நறுக்கி, ஒன்று, ஒன்றாக விழுங்கிகொண்டு இருக்கிறது. ஆகவே, எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முதலில் அ.தி.மு.க–வை மீட்க வேண்டும் என்றுச் சொல்லி, நம்முடைய கூட்டணியை பற்றிப் பேச அவருக்கு எந்த அருகதையும் கிடையாது? ஏனென்றால் நம்முடைய கூட்டணி கொள்கை கூட்டணி, இது தேர்தலுக்காக அமைந்த கூட்டணி அல்ல என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிற்குள் அ.தி.மு.க – பா.ஜ.க ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என்றால் தமிழ்நாட்டுக்குள் அந்த கூட்டணி ஆட்சி வந்தது என்றால், தமிழ்நாட்டுக்குள் மீண்டும் இந்தி திணிப்பு வரும், தமிழ்நாட்டுக்குள் மும்மொழி கொள்கை வந்துவிடும், தமிழ்நாட்டுக்குள் தொகுதி மறுவரையறை வந்துவிடும், தமிழ்நாட்டுக்குள் புதியக் கல்விக் கொள்கை வரும், குலக்கல்வித் திட்டம் வரும். இருக்கக்கூடிய நிதி உரிமையையும் அ.தி.மு.க விட்டு கொடுத்துவிடுவார்கள்.

ஆகவே, பா.ஜ.க – அ.தி.மு.க–வை வீழ்த்துவதற்கான அந்த போரில், 2026 சட்டமன்ற தேர்தலில் முன்கள வீரர்களாக முன்வரிசையில் நாம் அத்தனை பேரும் நிற்க வேண்டும் என்று கூறிக் கொள்கின்றேன்.

நமக்கு தலைவர் அவர்கள் ஒரு இலக்கு கொடுத்திருகிறார்கள். குறைந்தது 200 தொகுதியில் நாம் வெற்றிப்பெற்று காட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு முதல் தொடக்கமாக முதல் மூன்று தொகுதிகளாக நம்முடைய துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம் தொகுதி இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதை நீங்கள் ஒரு சபதமாக, உறுதிமொழியாக இன்றைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

2026 சட்டமன்ற தேர்தலில் கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டுமென்றால், நம்முடைய தலைவர் தொடர்ந்து இரண்டாவது முறையாக அந்த முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டுமென்றால், நாம் அத்தனைப்பேரும் அடுத்த ஆறு மாதங்கள் சும்மா இருக்கக்கூடாது. தொடர்ந்து களத்தில் இறங்கி மக்களை சந்திச்சு பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய வட்ட மற்றும் பாக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உட்பட வருகை தந்திருக்கக்கூடிய அத்தனைபேருடைய பணிகளும் சிறக்கட்டும். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்றுச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பரந்தாமன், வெற்றியழகன், கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர், மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி, பகுதிக் கழகச் செயலாளர்கள் முரளி, ராஜசேகர், வாசு, கூ.பி.ஜெயின், சு.வேலு, சுதாகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர்கள் பாலமுருகன், ஜெகதீஷ், வினோத், ஜி.ஜெ.பிரபு, தனசேகர், சங்கர் நானா, செந்தில்குமார், மோகன், ஜெயக்குமார், பாலாஜி, ஜெகதீஷ்வரன், மகேந்திரன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.